මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **LAE/2025/34** **2025.03.31**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்

2011 ஆம் ஆண்டின் 28 இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 54(2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை உடன் அழைத்துச் செல்லத்தக்கவாறான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும் அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதே போன்று இத்தேர்தலில் அரசியல் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலைய முகவரொருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் பத்தாம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையானவிண்ணப்பப் படிவங்களைதேர்தல்கள் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உரியதகுதிச் சான்றிதழின் படிவமொன்றை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத் தளத்திலிருந்தும் (www.elections.gov.lk)பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக் குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய ஆள் கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதோடு அதன் பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும். தேர்தல் ஆணைக்குழுவினால் வலிமையிழப்பிற்கு ஆளாகியுள்ள நபர்களுக்காக விநியோகிக்கப்பட்டுள்ள பத்து வருடங்களுக்குச் செல்லுபடியாகும் வகையிலான தற்காலிக அடையாள அட்டையைத் தம்வசம் வைத்திருக்கும் ஒருவருக்கு தனது வலிமையிழப்பை உறுதிப்படுத்தக்கூடியவாறு வைத்தியரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வைத்திய அறிக்கைக்குப் பதிலாக குறித்த அடையாள அட்டையின் நிழற்பிரதியைச் சமர்ப்பித்தல் போதுமானது.

05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனுமோர் அடையாள அட்டை மற்றும் இத்தகுதிச் சான்றிதழ் என்பனவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளரையும் உடனழைத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலையப் பணியாட்குழுவினால் வாக்காளரின் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் என்பதோடு உடன் அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து தகுதிச் சான்றிதழ் IIஆம் பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு பணியாட்குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச்சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது என்பது வலியுறுத்தப்படுகின்றது. வாக்கு அடையாளமிடப்பட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வைத்துக் கொள்ளப்படும்.

**08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருகை தருவதற்கும் இயலாத வாக்காளரொருவருக்குத் தேவைப்படின், இதற்கு முந்திய வாக்கெடுப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்கு சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்கு அவகாசமுள்ளதெனவும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.**

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.